முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1626

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.03.2024**, செவ்வாய்க்கிழமை

1. வாவென்று கருணை கொண்டு அழைத்திடும்
   வள்ளலே கலியுகத்தின் தவசியே
   தாய் என்று உரிமையோடு அறத்தின்வழி
   தர்மத்தில் பொருளுதவி ஏற்று கருணை கொண்டு
2. கருணை கொண்டு கலியுகத்தில் உலக மக்களுக்கு
   கந்தவேலன் என் ஞானத்தை உறுதியோடு
   அழியாமை பெறுவீர் வா வா என
   அனைவருக்கும் அறமாக தவமாக சர்வசூட்சமமாக
3. ஆகவே குருவாக நின்றருள் புரிகின்ற
   குரு ராஜனே அரங்கனே
   குறைவின்றி உந்தனுக்கு சுப்பிரமணியர் யான்
   கூறிடுவேன் ஞானஅறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் மாசி மாதம் 29ம் நாள், 12.03.2024, செவ்வாய்க்கிழமை)
4. ஆசிதனை அரங்கன் ஞானசபையாம் ஓங்காரக்குடிலுக்கு
   ஆறுமுகன் யான் சக்தி ஊட்டி வழங்குகின்றேன்
   வரம் தரும் கலியுகத்தின் சிறந்த ஞானசபை
   வள்ளலாக அரங்கன் வாழுகின்ற சபையாகும்
5. சபைதனில் சற்குருவாக சகல ஞானிகளும்
   சடாட்சரத்தில் ஒளியாக நிரம்பி அருள்பாலிப்பதாலே
   ஆதலால் உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி வந்து
   அரங்கன் திருவடி பற்றி ஆசிதீட்சை ஏற்பதோடு
6. யுகமாற்றம் புரிகின்ற மகாசக்தியாக
   உருவாக்கும் அரங்கர் அன்னதானத்தில்
   அன்னதானத்தில் தொண்டும் பொருளுதவியும்
   அன்னதுவை கொள்கையாக ஏற்று பல திக்குகளிலும்
7. திக்குகளிலும் எடுத்துச் சென்று
   தேசிகனின் நாமஜெபத்தோடு உறுதிகொண்டு
   ஆசிபட தர்மம் வளர்க்கின்றவர்க்கும் அரங்கன் நாமத்தை சொல்லி
   ஆற்றல்பட சேவையாற்றுகின்ற அனைவருக்கும்

8. அனைவருக்கும் வேலவன்என் ஆசி பலம்கிட்டி
வினை நீக்கும் வல்லமையும்
விரைந்து உலக மாற்றம் செய்யும்
மகத்துவமும் கிட்ட நேரும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–